18 பிப்ரவரி 2024
தவக்காலம் முதல் ஞாயிறு

NEW WAY OF BEING CHURCH

newbec

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஆன்மீக ஒன்றிப்பில் பங்குகொள்ளும் உணர்வோடு தூதுரைத்தல், கொண்டாடுதல் மற்றும் செவிமடுத்தல் (மத்தேயு 5: 13-16)




# கதவுகளைத் திறப்பதற்கான ஒரு பருவம்

பிப்ரவரி 14 ஆம் தேதி, அகில உலக திருஅவை முழுவதும் சாம்பல் புதன் கடைப்பிடிக்கப்பட்டது. இது தவக்காலத்தின் தொடக்கத்தைக் குறிக்கிறது. தவக்காலம் என்பது, சிந்தித்தல், மனம் திரும்புதல் மற்றும் ஒப்புரவின் காலம். நம் வாழ்க்கையில் கடவுளோடு நமக்கிருந்த உறவைப் பாதித்த நிகழ்வுகளை ஆழமாகச் சிந்தித்து, மீண்டும் அவரோடு மீண்டும் ஒப்புரவாகிட இத்தவக்காலம் நம்மை அழைக்கிறது. இந்த உருமாற்றத்திற்கான பயணத்தில் நமக்கு உதவியாக இருக்க, இறைவேண்டல், உண்ணாநோன்பு மற்றும் தர்மகாரியம் ஆகியவற்றில் ஈடுபட திருஅவை நம்மை அழைக்கிறது.

தற்செயலாக, பிப்ரவரி 20 அன்று ஐக்கிய நாடுகள் சபை பிப்ரவரி 20 ஆம் தேதி உலகசமூக நீதி நாளை அனுசரிக்கிறது. இந்த நாள், வறுமை, பாலின சமத்துவம், வேலையின்மை, மனித உரிமைகள் மற்றும் இன்னும் பல நிலைகளில் சமூக நீதிப்பிரச்னைகளில் கவனம் செலுத்தவும், சமூக சமத்துவத்தை நோக்கி செயல்படவும் உதவுவதே இதனுடைய நோக்கம். ஆனால் இதற்கும் தவக்காலத்திற்கு என்ன தொடர்பு?

திருத்தந்தை 2017 ஆம் ஆண்டின் தவக்காலச் செய்தியில் இவ்வாறு குறிப்பிடுகிறார். “தேவையில் இருக்கும் அனைவருக்கும் கதவுகளைத் திறப்பதற்கும், கிறிஸ்துவின் முகத்தை அவர்களில் அடையாளம் காண்பதற்கும் தவக்காலம் ஒரு பொருத்தமான காலம். **நாம் சந்திக்கும் ஒவ்வொரு வாழ்க்கையும் ஒரு பரிசு என்று ஏற்றுக்கொண்டு அதை அன்பு செய்து அதற்குரிய மரியாதை தரவேண்டும்.**

எனவே தவக்காலத்தை கடவுளுக்கு மட்டுமல்ல; நம்முடைய அயலார் குறிப்பாக, ஏழைகள், ஒதுக்கப்பட்ட மற்றும் ஒடுக்கப்பட்டவர்களுக்கும் “கதவுகளைத் திறக்க” அழைக்கப்படுகிறோம். தவக்காலம் என்பது கடவுளிடம் நெருங்கி வருவதன் மூலம் தனிப்பட்ட மனமாற்றத்தை அனுபவிப்பதற்கும், நம்மைச் சுற்றியிருப்போருடன் நெருங்கி வருவதன் மூலம் சமுதாய சமத்துவத்துவத்திற்கு நாம் உட்படவும், இது நமக்குக் கொடுக்கப்பட்ட ‘அருளின் காலமாகும்’

எனது இல்லம், சுற்றுப்புறம், பணியிடங்கள் மற்றும் சமுதாயத்தில் அதிகமான சமத்துவத்தை நோக்கி நான் உழைக்க, இறைவேண்டல், உண்ணாநோன்பு, தர்மகாரியங்கள் ஆகிய தவக்கால நடைமுறைகள் எந்த வகையில் எனக்கு உதவிசெய்கின்றன? என்று நம்மை நாமே கேட்டுக்கொள்வது உதவியாக இருக்கும்.

பாவத்தினால் கடவுளுக்கும் மனிதகுலத்திற்கும் இடையே முறிந்த உறவை மீண்டும் நிலைநிறுத்த கடவுள் நோவாவுடன் மீண்டும் தம்முடைய உடன்படிக்கையை நிலைநிறுத்துவதை இன்றைய முதல்வாசகம் நமக்கு நினைவூட்டுகிறது. உடன்படிக்கையின் அடையாளமாக கடவுள் வானவில்லைத் தேர்ந்தெடுத்தார். வானவில் ஏழு வெவ்வேறு நிறங்களைக் கொண்டுள்ளது. மனிதகுலம் என்பது, பல்வேறு இனம் சமயம், கலாச்சாரம் மற்றும் பொருளாதாரப் பின்னணியில் உள்ளவர்களைக் கொண்டிருந்தாலும், நாம் ஒரு மனித குடும்பத்தை உருவாக்குகிறோம்.

எனவே, இத்தவக்காலத்தில்;
“..நம்முடைய உண்ணாநோன்பு - நீதிக்கான பசியாக இருக்கட்டும்
நம்முடைய தர்மகாரியங்கள் அமைதியின் காணிக்கையாக இருக்கட்டும்
நம்முடைய இறைவேண்டல் தாழ்ச்சி மற்றும் நன்றியுள்ள இதயங்களின் பிரதிபலிப்பாக இருக்கட்டும்”

(தவக்கால ஒற்றுமைக்கான இறைவேண்டல், கத்தோலிக்க நிவாரண இயக்கம்)

**தவக்காலம் என்பது அடிமைத்தனத்திலிருந்து விடுதலைக்கும், துன்பத்திலிருந்து மகிழ்ச்சிக்கும் இறப்பிலிருந்து வாழ்வுக்கைக்கும் செல்லும் பாதை**

திருத்தந்தை பிரான்சிஸ்







### இன்றைய இறைவார்த்தை:

தொடக்கநூல்: 9:8-15

திருப்பாடல்: 25: 4-9

1 பேதுரு: 3: 18-22

மாற்கு 1: 12-15

INTERNAL CIRCULATION ONLY
BUL 07/2024

**வெளியீடு:** மாறை மாவட்ட மேய்ப்புப்பணி மையம் (API)
**மின்னஞ்சல்:** api@archkl.org